தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௰௧	மலர்
௪௪	சாதாரண, ஆனி (1970 — ஜூன் — ஜூலை)	௩

உரிச்சொல் - ஒரு ஆய்வு.

திரு. டாக்டர் மோ. இசரயேல்,

தமிழ்த்துறை, மதுரைப் பல்கலைக்கழகம்.

தொல்காப்பியனார் தமிழில் சொல்வகை 'பெயரே வினை யென்று ஆயிரண்டு' (தொ. சொ. 158) என்று தொகைப் படுத்திக் கூறிய பின்னர்.

இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் றோன்றும் என்ப (தொ. சொ. 159)

என்றார். 'மருங்கில்' என்றதனால் பெயர் வினைகளை யொட்டி அன்றேல், அவற்றைச் சார்ந்து இடை, உரி ஆகிய சொற்கள் வழங்கும் என்பது தெளிவு. மேலும் இடை, உரி ஆகியவற்றின் சிறப்பின்மையும் இதனால் பெறப்படுகின்றது.

இடையியலில் இடைச் சொற்கு இலக்கணம் கூறுங்கால் "இடையெனப்படும் பெயரொடும் வினையொடும் நடைபெற்றி யலும் தமக்கியல்பிலவே" (தொ. சொ. 249) என்று அவர் கூறியதில் இடைச் சொல்லின் வழக்குத் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

ஆனால் தொல்காப்பியனார், நன்னூலார் ஆகிய இலக்கண ஆசிரியர்கள் உரிச்சொல்லின் தோற்றம், வடிவம், பயன்வகை (செயல் - function) ஆகியவற்றைத் தம் நூற்களில் தெளிவு படுத்த முயன்றும் இன்னும் அவை தனி வகையான சொற்கள் என்று வேறுபடுத்திக் காட்டமுடியாத நிலையிலேயே உள்ளன. இலக்கண நூற்களில் அமைக்கப்பட்டிருக்கும் உரிச்சொற்களை ஆய்ந்து உரியியல்கள் அமைக்கப்பட்டிருப்பதன் நோக்கம், உரிச் சொற்களின் இயல்பு ஆகியவற்றை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

உரிச்சொல் இலக்கணம் :— தொல்காப்பியனார் உரிச்சொற்கள் 'பெயர் வினைகளின் மருங்கிற் றேன்றும்' (தொ. சொ. 159) என்றும், 'உயிரும் புள்ளியும் இறுதியாகி இசையினும், குறிப்பினும் தோன்றி நெறிப்படவாராக் குறைச் சொற்கிளவி' (தொ. எ. 482), என்றும் பெயரினும் வினையினும் மெய்தருமாறும்' (தொ. சொ. 297) என்றும், 'ஒரு சொல் பலபொருட்டு உரிமை தோன்றியும் பலசொல் ஒரு பொருட்டு உரிமை தோன்றியும்' வருவன (தொ. சொ. 297) என்றெல்லாம் அவற்றின் இயல்புகளைக் குறிப்பிடுகின்றார்.

மேலும் "எழுத்துப் பிரிந்திசைத்தல் இவணியல்பு இன்றே" (தொ. சொ. 395) என்பதனால் பெயர் வினைகளைப் போன்று உரிச்சொற்கள் முதனிலை இறுதி நிலைகளாகப் பிரிந்து வேறு வேறு பொருள் உணர்த்துதல் இல்லை என்பதைக் குறிக்கின்றார். எச்சவியலில் "இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே (தொ. சொ. 455) என்று இடைச் சொற்களின் செயலைப்பற்றிக் கூறித் தொடர்ந்து "உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய" (தொ. சொ. 456) என்று உரிச்சொல் இயல்பையும் புலப்படுத்துகின்றார்.

பவணந்தி முனிவர் உரிச்சொற்கள் பலவகைப் பண்பையும் பகர்வன, ஒரு குணம் பலகுணம் தழுவி வருவன, —— பெயர்வினைகளை ஒருவாதன (நீங்காதன), செய்யுட்கு உரியன (நன். 442) என்றெல்லாம் குறிக்கின்றார்.

உரிச்சொல் பற்றிய கொள்கைகள் :— இலக்கண நூலார் உரிச்சொற்களைத் தனிவகைச் சொற்கள் என்றே கொள்ளுகின்றனர். ஆனால் அவர்களே உரிச்சொற்களுக்குப் பெயர்வினைகளுக்கு ஒத்த சிறப்பினைக் கொடுக்கவில்லை. தெய்வச் சிலையார் இவைகளைத் தாது சொற்கள் (வினைவேர்கள் verbal roots) என்று கருதுகின்றார். [1] பிற்கால அறிஞர் சிலர் உரியியலில் தொல்காப்பியனார் சில வேர்ச்சொற்களைத் தொகுத்துக் கூறியுள்ளார் என்று கருதுகின்றனர். [2] இன்னுஞ் சிலர் உரிச்சொற்களை பெயரடை வினையடைச் சொற்கள் என்றே கொள்ளுகின்றனர். [3]

உரிச்சொற்களின் தோற்றம், வடிவம், பயன்வகை முதலியன :— தொல்காப்பியனார் உரிச்சொற்களைப்பற்றிப் பல்வேறு இடங்களில் கூறியுள்ள செய்திகளை அவர் உரியியலில் தொகுத்துள்ள நூற்றிருபது உரிச்சொற்களின் இயல்போடு ஒப்பிட்டுப் பார்த்தால் அவற்றின் உண்மை நிலை விளங்கும்.

தோற்றம் :- "இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி" என்று கூறி, தொல்காப்பியனுர் உரிச்சொற்களின் தோற்றத்தை விளக்குகின்றுர். பெயர், வினை, இடை ஆகிய சொற்களின் தோற்றததைப் பற்றி எங்கும் கூருத தொல்காப்பியனுர் உரியியலில் மட்டும் தோற்றத்தைப் பற்றிக் கூறுவானேன்? உரிச்சொற்கள் தனிப்பட்ட தோற்றம் உடையனவா? இசைபற்றித் தோன்றுவதற்குத் துவைத்தலும், சிலைத்தலும், குறிப்புப்பற்றி வருவதற்குக் கறுப்பும் சிவப்பும், பண்புபற்றியதற்கு நிறத்துருவம் (தொ. சொ. 292) இளம்பூரணர் தரும் எடுத்துக்காட்டுக்கள். தெய்வச்சிலையார் உறு என்பது இசையாலும் கறுத்தான் என்பது குறிப்பாலும் கண்சிவக்கும் என்பது பண்பாலும் புலப்பட்டது. (தொ. சொ. 293) எனக்கூறி இளம்பூரணரில் நின்று சிறிது வேறுபடுகின்றனர். உரையாசிரியர்கள் இவ்வாறு வேறுபட்டாலும். ஒரு மொழியின் எல்லாச் சொற்களும் இசை, குறிப்பு, பண்பு என்பவற்றின் அடிப்படையிலேயே தோன்றுகின்றன என்பது ஆய்வாளர்க்குத் தெளிவு. எழுத்ததிகாரத்தில் 'நெறிப்பட வாராதன குறைச்சொற் கிளவி' என்றெல்லாம் உரிச்சொற்களைக் குறித்த ஆசிரியர், அவையும் பிறசொற்களைப் போன்றே தோன்றும் என்பதை வலியுறுத்தற் பொருட்டே உரியியலின் பிறப்பினைக் கூறுகின்றுரோவென ஐயுற இடமுண்டு. அன்றேல் வடிவத்திலும், பயன் வகையிலும் உரிச் சொற்களைத் தனிவகைச் சொற்களாக வேறுபடுத்திக் காட்டாத ஆசிரியர் சில சொற்களின் பொருளைத் தொகுத்துரைக்கத்தாம் கருதிய உரியியற் பகுதியில் சொற்களின் தோற்றத்தைப் பற்றியும் குறிப்பிட விழைந்தார் என்று எண்ணவும் இயலும். எனவே உரியியலில் சில அருஞ்சொற்களின் பொருள் கூறப்படுதல் போன்று சொற்களின் தோற்றமும் கூறப்படுகின்றது என்று கருதுவதில் தவறில்லை.

வடிவம் :— 'பெயரினும் வினையினும் மெய் தடுமாறி' (தொ. சொ. 297) என்று தொல்காப்பியனுர் கூறுவதற்கு,

இளம்பூரணர்

"பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் சென்று பொருட்களை விளக்கும்; மெய் என்பது பொருள்; தடுமாறுதல் என்பது பெயர்பற்றியும் வினைபற்றியும் வரவினை நோக்கி" என்றும்,

சேனுவரையர்

"பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் தம்முருபு தடுமாறி"

நச்சினர்க்கினியர்

"பெயர் வினைகள் போன்றும் அவற்றிற்கு முதனிலையாயும் தம்முரு தடுமாறித் தத்தமக்கு உரிய முறைமையாற் சென்று நிற்கும் நிலைக்களங்களாலே" என்றும் தெய்வச்சிலையார்

"உரிச்சொல்லாகிய உருபு பெயரின் கண்ணும் வினையின் கண்ணும் தடுமாறி" என்று கூறி அவை தடுமாறுங்கால் பெயர் வினைகளைச் சார்ந்தும், அவற்றிற்கு அங்கமாகியும் வரும் என்று கூறி 'உறுவளி' என்பது பெயரைச் சார்ந்து வந்தது. 'உறக்கொண்டான்' என்பது வினையைச் சார்ந்து வந்தது. 'உறுவன்' என்றவழிப் பெயர்க்கு அங்கமாயிற்று. 'உற்றான்' என்றவழி வினைக்கு அங்கமாயிற்று' என்றும் விளக்கமும் தருகின்றனர்.

தொல்காப்பியனார் கொடுத்திருக்கும் உரிச்சொற்களை அவர் தரும் இலக்கணத்திற்கு உரையாசிரியர்கள் கூறும் விளக்கங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது சில பெயரைப் போன்றும் பெயரைச் சார்ந்தும் பெயருக்கு உறுப்பாகியும், பலவினையைப் போன்றும் வினையைச் சார்ந்தும் வினைக்கு உறுப்பாகியும் அமைகின்றமை அறிதல் இயலும்: தொல்காப்பியனார் 'பெயரினும் வினையினும் மெய் தடுமாறி' என்று கூறுவது பெயரைப் போன்றும் பெயரின் கண்ணும், வினையைப் போன்றும், வினையின் கண்ணும் என்று பொருள் தந்து நிற்றலால் 'இன்' சிறப்பாக 5-ஆம் வேற்றுமை ஒப்புப் பொருளிலும் பின்னர் 7-ஆம் வேற்றுமை இடப்பொருளிலும் கொள்ளப்படுகின்றது என்பது அறிதல் இயலும்.

'நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவி' என்று தொல்காப்பியனார் கூறுவது இவை ஒரு நெறிப்பட (ஒரே தன்மைப்பட) வாராக் குறைச்சொற் கிளவிகள் என்பதைத் தெளிவுறுத்துகின்றது தொல்காப்பியனார் "எழுத்துப் பிரிந்திசைத்தல் இவணியல் பின்றே" (தொ. சொ. 395) என்னும் சூத்திரத்தில் உரிச்சொற்களில் அவற்றின் உறுப்புக்களாகிய எழுத்துக்கள் முதனிலையும் இறுதி நிலையுமாகப் பிரிந்து நின்று வேறுவேறு பொருள் உணர்த்துதல் இல்லை என்று கூறி, பெயர் வினைகளின் முதல் இறுதி நிலைகள் போன்று உரிச்சொல்லின் எழுத்துக்கள் பிரிந்து நின்று தனிப்பொருள் தருதல் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டுகின்றார். எனவே உரிச்சொற்கள் தனி உருபன்களால் ஆக்கப்பட்டவை என்பது அவர் கொள்கை. எ - கா. உறு, தவ, நனி முதலியன.

பயன்வகை:— இலக்கண நூலார் உரிச்சொற்கள் எல்லாவற்றிற்கும் பொதுமையான ஒரு செயலைக் குறிப்பிடவில்லை எனலாம். உரிச்சொல்லின் பொது விலக்கணம் கூறும் சூத்திரத்திலும், உரியியலிலும் அவர் உரிச்சொல்லின் பயன்வகை பற்றிய செய்தி ஒன்றும் தரவில்லை. அவர் பெயரியலில் 'அவற்றுவழி மருங்கிற் ரோன்றும்' என்று கூறிப்பெயர்வினைகளைச் சார்ந்து வழங்கும் என்பதைப் பெறவைக்கின்றார். எச்சவியலில் "இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே" (தொ. சொ. 455) என்று கூறும் சூத்திரத்தைத் தொடர்ந்து "உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய" (தொ. சொ. 456) என்று குறிப்பிட்டு, உரிச்சொற்களிலும் சில வேறுபடுக்கும் சொற்களாகச் செயலாற்றும் என்கின்றார் எ-கா. உறு, தவ, நனி, கடி என்றற்றொடக்கத்தன.

உரிச்சொல் தனிவகைச் சொல்லா? உருபன் நிலையில் (morphological level) ஒரே வகையான வேறுபாட்டு உருபனை (inflectional morpheme) ஏற்கும் அடிகளையே நாம் ஒருவகைச் சொற்கள் எனப்பகுக்க முடியும். உரிச்சொற்கள் எல்லாம் ஏதாவது ஒரே வகையான வேறுபாட்டு உருபனையும் ஏற்பதில்லை. [4]

தொடரன் நிலையிலும் (syntactioal level) அவையாவும் ஒரே பயன் வகையை உடையவை அல்ல. உரிச்சொல்லின் பொது இலக்கணம் கூறும் சூத்திரம் கூட பயன் வகையைப்பற்றி ஒன்றும் கூறவில்லை.

உரிச்சொற்களில் சில பெயர்களாகவே உள்ளன. எ-கா. உரு. கலி, ஒற்கம், சீர்த்தி, இலம்பாடு முதலியன. சிலவினையடிகளாக உள்ளன. எ-கா. நம்பு, படர், புலம்பு, துவைத்தல், அமர்தல், சிலைத்தல் முதலியன. இன்னும் சில பெயரிலும் வினையிலும் கொள்ள இயலாத அருஞ்சொற்களாயுள்ளன. எ-கா. உறு. புரை, நளி, தவ, நனி, குழ, மழ முதலியன. உரிச்சொற்களை எல்லாம் வேர்ச்சொற்கள் என்றோ, வினைவேர்கள் என்றோ கூறுதல் பொருந்தாது. அவை வேர்ச்சொற்களாயின் வோச்சொல் வாய்பாடுகளையெல்லாம் பதவியலில் கொடுத்திருக்கும் நன்னூலார் சில வேர்ச்சொற்களை மட்டும் உரியியலில் தொகுப்பானேன்? [5] மேலும் சில சொற்கள் பெயர்களாகவும், பண்புப் பெயர்களாகவும் ஆக்கப் பெயர்களாகவும் உள்ளனவே! எ-கா. கலி, உரு, வெம்மை, செழுமை, ஒற்கம், சீர்த்தி முதலியன.

உரிச்சொற்களையெல்லாம் பெயர்வினையசைச் சொற்கள் என்று கூறுதல் இயலாது. ஏனெனில் உறு, தவ, நனி, குழ, மழ போன்ற சில சொற்களே அடைகளாக அமைந்து வேற்றுமைச் சொற்களாகச் (தொ. சொ. 455) செயலாற்றுகின்றன.

எனவே இலக்கண நூலார் உரிச்சொல் எனத் தொகுத்திருப்பவை எல்லாம் பொருள் வெளிப்படையாக விளங்காத சில அருஞ்சொற்களே ஆகும். அவற்றில் பல வழக்கிறந்தவைகளாக உள்ளன. நன்னூலார் 'செய்யுட்கு உரியன' என்று கூறும் செய்தியும் இதனைத் தெளிவுபடுத்துகின்றது. இலக்கண நூலார் இவற்றைப் பெயர், வினை, இடை ஆகியவற்றில் பகுத்துக்காட்ட இயலாத சொற்களாகக் கருதினர் என்றும் தெரிகின்றது. இதுகாறும் உரிச்சொற்கள் தன் வகையான சொற்கள் அல்ல என்பதும் விளக்கப்பட்டது.

உரியியலின் செய்தி :— அங்ஙனமாயின் இலக்கண நூலார் அமைத்திருக்கும் உரியியலின் செய்தி யாது? உயிரியலில் சொற்களின் வடிவமோ, பயன்வகையோ சிறப்புற விளக்கப் படாமல் சொற்களின் பொருளே கூறப்பட்டுள்ளது.

தொல்காப்பியத்தின் உரியியலின் முதல் இரண்டு சூத்திரங்களில் ஒன்று உரிச்சொல்லின் பொதுவிலக்கணம் கூறுவது; அடுத்தது உரியியலின்கண் அமையும் செய்தி கூறுவது. முதற் சூத்திரத்தில் வழக்கின்கண் பயிலாத சொற்களைப் பயின்ற சொற்களோடு சேர்த்துப் பொருள் சொல்லுக என்று கூறுமாற்றான் 'பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்திப் பொருள் வேறு கிளத்தல்' என்னும் தொடரை அமைக்கின்றார் ஆசிரியர். இரண்டாம் சூத்திரத்தில் ''வெளிப்படு சொல் கிளத்தல் வேண்டா; வெளிப்பட வாரா உரிச்சொல் மேன'' (தொ. சொ. 298) என்பதனால் வழக்கில் எல்லோராலும் அறியப்பட்ட சொற்களை உரியியலில் எடுத்துக் கூருது பொருள் அறியப் படாத சொற்களையே கூறுகின்றார் என்பதைத் தெளிவு படுத்துகிறார். தொடர்ந்து பல சூத்திரங்கள் நூற்றிருபது உரிச்சொற்களின் பொருள் கூறுவன. பின்னர் இறுதியாக அமைந்துள்ள எட்டு சூதித்ரங்களில் உரிச்சொற்பொருள் மரபை ஓத்திருத்தலும், மேற்சொன்ன நூற்றிருபது உரிச்சொற்கள் பிறபொருள் உணர்த்தலும், சொற்களால் கருத்துணர்தலின் நிலையும் சொற்கள் பொருளை உணர்த்தும் ஆற்றலும், மக்கள் பொருளை உணரும் ஆற்றலும், சொற்களின் பொருள்கட்குக் காரணம் உண்டு என்பதும். உரிச்சொற்களில் எழுத்துப் பிரிந்து நின்று

பொருள் தருதல் இல்லை என்பதும், சொற்களின் பொருள் கொள்ளுவதற்குப் புறனடையும் கூறப்பட்டுள்ளன. எனவே உரியியலின் மிகுதியான சூத்திரங்கள் சில சொற்களின் பொருள் கூற, எஞ்சிய பத்து சூத்திரங்கள் (முதற்கண் இரண்டும் இறுதியில் எட்டும்) சொற்பொருள் கொள்ளும் முறைமை பற்றியே கூறுகின்றன.

இச்சான்றுகள் உரியியலை அருஞ்சொற்பொருள் கூறும் பகுதி என்று கொள்ளுவதற்குத் துணை செய்கின்றன.

இலக்கியத்தில் உரிச்சொல் வழக்கு :— இலக்கண ஆசிரியர்கள் தரும் உரிச்சொற்களை அவை இலக்கியத்தில் ஆட்சிபெறும் வழக்குகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் பின்வருமாறு பகுத்துக் கொள்ளுதல் இயலும்.

1. பெயர்ச்சொற்கள்

அ. பெயரடிகள்

உரு (புறம் 6,58,60)
கலி (புறம் 22,52)

ஆ. ஆக்கப்பெயர்கள்

ஓற்கம் (புறம் 375)
இலம்பாடு (புறம் 378)
சீர்த்தி (புறம் 15)

இ. பண்புப் பெயர்கள்

வெம்மை – வெய்யோய் (புறம். 145) வெய்யோன்
செழுமை – செழும் (புறம் 61, 68)

2. வினைச்சொற்கள்

அ. வினையடிகள்

நம்பு — நம்பி (புறம் 136), மேவலை (புறம் 7)
படர்— படர்ந்து (புறம் 150) படரா (புறம் 181)
படரின் (புறம் 35)

படரும் (புறம் 137)
புலம்பு—புலம்ப (புறம் 36) புலம்பல் (புறம் 380)

ஆ. தொழிற்பெயர் வாய்பாட்டில் கூறப்படும் வினையடிகள்

இயைப-இயைந்த (புறம் 190), இயைந்து (புறம் 71)
இயைவது (புறம் 182)
துவைத்தல்-துவைப்ப (புறம் 158) துவைத்து
(புறம் 370) துவைக்கும் (புறம் 280)
சிலைத்தல்-சிலைப்ப (புறம் 368) சிலைத்து (புறம் 78)
சிலைப்பின் (புறம் 166) சிலைக்கும் (புறம் 90)

இ. எதிர்மறைத் தொழிற்பெயர் வாய்பாட்டில் வினையடி

எய்யாமை — எய்யாது (புறம் 148)

3. அடைகள்

அ. பெயரடைகள்

உறு (புறம் 72, 135, 183)
புரை — புரைமை (புறம் 26,210) புரைமையோன்
(புறம் 307)
புரையோர் (புறம் 354) புரையோன் (புறம் 398)
மழ — (புறம் 22, 38) மழவர் (புறம் 90, 98)
மழலை (புறம் 92)

ஆ. பெயர் - வினையடைகள்

தவ — (புறம், 79, 214, 235)
நனி — (புறம் 31, 43, 158)

* * *

அடிக்குறிப்புக்கள்

1. தெய்வச்சிலையார் சொல்லதிகார உரை சூத்திரம் 292
2. Meenakshisundaram, T. P., Tamil Encyclopedia, Vol, V. p 471. A History of Tamil Language. p. 74
   Ilakkuvun, S., Semantemes and Morphemes and Tamil Language, p. 35.
3. Zvelebil, K. 'The Existence of Adverbs in Tamil', Tamil Culture VIII (1959) p. 45
4. Hockett, C. F., A Course in Modern Linguistics, p. 225.
5. பவணந்தி முனிவர், நன்னூல், சூத்திரம் 137.

* * *

துணைபுரிந்த நூற்கள்.

1. இளம்பூரணர் - தொல்காப்பியம் - சொல்லதிகார உரை- நமச்சிவாய முதலியார் பதிப்பு, 1927.

2. சேனாவரையர் - தொல்காப்பியம் - சொல்லதிகார - உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1923.

3. தொல்காப்பியர் - தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1923.

4. நச்சினார்க்கினியர் - தொல்காப்பியம் - சொல்லதிகார உரை - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1944.

5. தெய்வச்சிலையார் - தொல்காப்பியம் - சொல்லதிகார உரை, கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர், 1929

6. மீனாட்சிசுந்தரம், தெ. பொ. - தமிழ்க் கலைக் களஞ்சியம், பகுதி 5, பக். 471.

7. Hockett, C. F., A Course in Modern Linguistics, New York: The Macmillain Company, 1958.

8. Ilakkuvan, S, Semantemes and Morphemes in Tamil Language, Nagercoil, 1957.

9. Israel, M., The Treatment of Morphology in Tolkappiyam (An un-published Thesis) Madras University, 1965.

10. Meenakshisundaram, T. P., A History of Tamil Language, Deccan College, 1965.

11. Subramanian, V. I, Index of Purananuru. University of Kerala, 1962.

12 Varadarajan M., Adjectives in Tamil Old and New Annals of Oriental Research, II (1937 — 1939)

13. Zvelebil, Kamil, The Existence of Adverbs in Tamil, Tamil Culture, VIII 1959

More About Adverbs and Adjectives, Tamil culture. IX (1961)

* * *

தமிழ்க் கூத்தமைதி - (கட்டுரை - எண்-க)

பண்ணாராய்ச்சி வித்தகர், ஏழிசைத் தலைமகன்
குடந்தை ப. சுந்தரேசன்.

நம் இந்திய நாட்டில் விளங்கும் ஆடற்கலை தென்னாட்டின் ஆடற்கலை எனவும் வடநாட்டின் ஆடற்கலை எனவும் இரு வகைப்படும். இவற்றுள்ளும் உட்பிரிவாய பல்வேறு பிரிநிலைகள் உள்ளன. தென்னாட்டுக்கலை பழைமை மாறாத நிலையில் நெடுங் காலம் இருந்து வருவதாகும். தமிழகத்துத் தனிக்கலை எற்றைக் குமே தனிச்சிறப்புடையது. ஆடற்கலை, கூத்தினைப் பற்றியதா யிருப்பின், அஃதே கூத்தாடற்கலையாகும். கூத்தினையாடுவோர், ஆண்களாயின் கூத்தர் எனவும் பெண்களாயின் கூத்தியர் எனவும் கூறப்பெறுவர். தமிழ் நாட்டிற்கே உரிய கூத்து முறைமையைத தமிழ்க் கூத்து எனவும் இந்திய நாட்டின் வடபகுதிக்குரிய பழைய கூத்து முறைமையினைப் பொதுவாக ஆரியக் கூத்து எனவும் கூறப் பெற்றது. தமிழ் மக்கள் ஆடுங்கூத்து தமிழ்க் கூத்து. அக்கூத் தினைப் பற்றியே விளக்கும் தமிழ் முறையைக் கூத்துத் தமிழ் எனக் கூறுப்பெறுவதுண்டு. இசை பற்றியேனும், கூத்து பற்றியேனும் தமிழ்ப்பற்றித் தனித்துக் கூறுமிடத்து இது தமிழ்க்குரித்து என்றே கூறப்படும்.

முத்தமிழ்ச் சொல்லமைதி

	தமிழ்	
இயல்	இசை	கூத்து
இயற்றமிழ்	இசைத்தமிழ்	கூத்துத்தமிழ்
தமிழியல்	தமிழிசை	தமிழ்க்கூத்து

இச்சொற்களின் அமைதியினை ஓர்ந்துணர்தல் வேண்டும். இவையாவும் தண்டாவுரை முத்தமிழின் தனித் தன்மைபற்றி எழுந்தனவாகும். கூத்துத் தமிழினை மட்டும் கூறும் நூல், கூத்த நூல் எனப்படும். அந்நூலாசிரியரை, கூத்த நூலாசிரியர் எனக் கூறப் பெறுவதியல்பு. கூத்த நூலில், எண்வகைக் கூலம்பற்றிக் கூறு மிடத்தும், எண் வகைக் கூலத்தினையும் பதினெண்வகைக் கூலத் தினையும் சிறப்பாகக் கூறப்பெறுதல் வழக்காம். உலகியல் யாவற்றையும் மக்களது வாழ்க்கை நிலை பலவற்றையும் கூறி அவற்றைக் கூத்தாடும் வகையில் மக்களுக்கு நல்லன காட்டும்

நூலே கூத்த நூல் மற்றைய மொழி போன்றல்லாது தமிழ் மொழியில் எதனையும் இருவகைப் பிரிவு நிலைபெறத் தோன்ற அறிவதே தொன்னெறி மரபாகும். அப்பிரிவினுள்ளும் இரண்டிரண்டு பிரிவாக அறிதலும் வழக்கின்பாற் படுமென்பர். தமிழ்க் கூத்தும் அப்பெற்றிமையில் அகக் கூத்து, புறக்கூத்து என முதற்கண் பிரிவாய இருவகைப் பிரிவினையுடைத்தாயிற்று. இவ்விருவகைக் கூத்தினுள், வல்லாராய தமிழ்க் கூத்தியர்க்குத் திருந்திய நலைக்கோலாகுக என பொதியில் வாழ் திருமுனியாம் அகத்தியன் இந்திரன் மகன் சயந்தனுக்குச் சாப விடை அருளினன் என்பது தமிழ்க் கூத்தின் வரலாறு பகரும் நுண்மையாகும். இவ்வாறே உருப்பசியும் தமிழகத்திற் சிறந்த காஞ்சி நகரத்துத் தேவகணிகையாய்ப் பிறந்தாள் என்பதும் அவள் மரபினராய தமிழ்க் கூத்தியர் வானவர் மகளிர் என்றும் சிறப்பிக்கப் பெற்றனர் என்பதுங் கூத்த நூல் வழக்காகும். அகக்கூத்தும் பல. புறக்கூத்தும் பல. அவற்றை எல்லாக் கூத்துக்கள் எனவும், பலவகைக் கூத்து எனவும் நூல்கள் குறிக்கும்.

தமிழகத்து ஆடற்கலை; அகக்கூத்துக்களுக்குரியவை இன்னின்னவை என்றும், புறக்கூத்துக்களுக்குரியவை இன்னின்னவை என்பதும் வரையறை செய்யப்பெற்றதாகும், ஆடலும், கூத்தும் ஒன்றன்று. ஆடினர் என்பது வேறு. கூத்தாடினர் என்பது வேறு. கூத்தும் ஆடி எனும் வழக்கினை நன்கறிதல் வேண்டும். இது போன்றே பாடற் கலையும் அகக்கூத்துக்களுக்கு வேறாகவும் புறக்கூத்துக்களுக்கு வேறாகவும் பகுத்துணர்ந்து வரையளவு செய்யப் பெற்றுள்ளன.

கூத்தர்களுக்கு இயல்பானே அமையப் பெறுவது, ஆடலும், பாடலும், அழகும் என்ற மூன்றுமாம். இவற்றுள் ஆண்களுக்கு அமையப் பெறும் ஆடலும், பாடலும். நன்கு வலியுடைத்தாயிருத்தல் வேண்டும். அழகென்பது ஏற்ற பெற்றி இயல்பினைப் பொருத்ததேயாம். பெண்களுக்கோவெனில், ஆடலும் பாடலும் அழகும் என்றிக் கூறிய மூன்றின் ஒன்றும் குறைபடாமல், இருத்தல் வேண்டுமாம், இவர்களே, அரசன் முன்னே ஆடிக் காட்டுவனவற்றைத் தனித்தனியே வகுத்து வேத்தியல் எனவும், பொதுவாக மக்களுக்கு முன்னே ஊர் விழாக் காலங்களில் பல்வேறு வகையாகவே ஆடிக்காட்டுவனவற்றை பொதுவியல் எனவும் பல்வகைக் கூத்துக்கள் எல்லாவற்றையுமே தத்தம் தொழின் முறைக்கேற்றவாறு பிரிவுபடுத்தி வகை செய்து கொண்டனர். வேத்தியலில் ஆடற்கலை மிகுதியாகவும், பொதுவியலில் கூத்துக்கலை மிகுதியாகவும் பயன் படுத்தப்படுவதே பண்டைய வழக்காம்.

எவ்வகைக் கூத்தினை அறிய முற்பட்டாலும், அக்கூத்தினைப் பல்வகையாக வகுத்தமையறிதலும், அவற்றை அகவழியாயும் புறவழியாயும் அறிதலும், வேத்தியலாகவும் பொதுவியலாகவும் கோடலும், கூத்து, தனித்தும் ஆடலோடு சேர்த்தும் உணர்த்திய நீர்மையறிதலும், இன்னும் பல்வகையானே தொழிற் படப்பயின்று அறிந்து, புணர்த்து, விளங்கவறிந்து, அறிந்து செலுத்தி அமைக்க வேண்டுமென்பதும், அமையவேண்டுமென்பதும் பருமட்டமான முடிபில் கூத்த நூல் கூறும் கருத்தாகும். அதுவே தமிழ்க் கூத்தமைதியின் தலைக்கடனாகும். வேத்தியல் அகம், பொதுவியல் புறமென்பாரும், பிறிது கூறுவாருமுளர் அவை முடிந்த நூல்களிற் கண்டு கொள்க, என்றார் அடியார்க்கு நல்லார். ஆடற் கூத்தியரை, அகக் கூத்தாடும் பதியிலார் எனக் கூறுகிறார் உரையாசிரியர். தமிழ்க் கூத்தமைதியின் நல்லியலினை தனித்தமிழ்வழி மக்கள் உள்ளத்தில் தெள்ளுறத் தெரிப்பதாய்த் தொகுத்துக் கூறுவது சிலப்பதிகார உரைப்பகுதியாகும். கூத்தர்கள், யாழ் வாசிப்பதிலும், பாடல்களைப் பாடுவதிலும் வல்லுநர் என்பது ஏனைய சங்க நூல்களானும் தெரிய வரும்.

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச் சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும், என்று இலக்கண நூலின் குறிப்பும் ஓர்ந்தறியத்தக்கது. விழவின் ஆடும் வயிரியர், எனுமிடத்துத் திருநாளின் கண்ணே கூத்தாடுங் கூத்தர் எனக் குறித்தார் நச்சினார்க்கினியர், இற்றை நாள் வரை அழிந்து படாது பாதுகாத்து வைக்கப் பெற்றிருக்கும். பழந் தமிழ் நூல் பலவற்றுள்ளும் கூத்தர் குறிப்புப் பலவற்றைக் காணலாம், இவை பலவும் ஒருபுறமிருக்க. பிற்காலத்திலோவெனின், ஆடற்கலைக்குரியர் பலரும் நாட்டியக்காரர் எனவும் கூத்துக்குரியர் பலரும் கூத்தாடிகள் எனவும் பிரிவுபட்டுத் தொழில் புரிவாராயினர் எனும் வழக்கு முறையே இன்று நாமறியும் உண்மையாக விளங்குகிறது. ஆயினும் ஒன்றிற்கொன்று அறவே தொடர் பற்று விட்டதெனக் கூறுவதற்குமில்லை.

இறைவனையே, கூத்தன் என்றழைத்தது தமிழ்த்திருமுறை. சிவனெனும் நாமம் தனக்கேயுரிய செம்மேனி எம்மான் தென் திசை நோக்கித் தமிழகத்தில் மட்டுமே ஆடிக்கொண்டிருப்பது அன்று முதல் இன்று வரை நன்கே காணக்கிடக்கும் பேருண்மையாகும். அவனே ஆனந்தக் கூத்தன். கூத்துவகைகளுள் ஒன்றாய

கதை தழுவிவரும் கூத்தே பிற்காலத்தில் நாடகம் எனப்பட்டது. அஃது நாடு - அகம், நாட்டினகத்தே வழங்கப்பெறும் கூத்து வகைகளை ஆடுவதைப் பற்றியதேயாம். அத்தகு ஆட்ட வகைகளில் வரலாற்று முறையும் விளக்கப் பெற்றது. 'கோடியர்' பொருநர், நாடகீயர், நிருத்தர், கண்ணுளர், வயிரியர், விறலியர், நடர் என்று எண்ணிய பெயர்கள் கூத்தர்க் கெய்தும். என்று சேந்தன் திவாகரமும் கூறுகிறது. மாதவி, (சிலப்பதிகாரத்தில்) அரங்கேறி ஆடியது ஆடற்கலை. அவள் ஆடன் மகளிர், பதினொரு ஆடல் வகைகளையும் நன்கு பயின்றவள் விழாக் காலங்களில் அதனையும் ஆடித் தொழில் புரிபவள். அவ்வாடல்களையே அவ்வவர் வரலாற்றிற் கொப்ப கூத்துக்களாகவும் ஆடப்பெறுதல் வேண்டும். அவையும் மாட்சிமைப்பட்ட நூல்களில் விதித்த முறைமையாலே விளங்க அறிந்து பயின்று ஆடப் பெறுதல் வேண்டுமாம். அதனைப் பயிற்றுவிக்கும் ஆசானை ஆடலாசிரியன் என்றே தமிழ் நூன்மரபு கூறுகிறது. அவரே எல்லா வகைக் கூத்துக்களையும் பயின்று ஆடவும் ஆட்டுவிக்கவும் வல்லவராம்.

எல்லாக் கூத்துக்களையுமே வேந்தன் முன் ஆடுவதற்கில்லை. அவை மக்கள் முன் ஆடப்படுவனவேயாம் வேந்தர்கள் தன் காலத்தேயே தன் முன் ஆடப்பெறுவனவற்றை வேந்தர்க்கு வேந்தனய இறைவன்முன் ஆடவேண்டி திருக்கோயில்களிலும் ஆடுமாறு செய்தான், அம்முறையும் நெடுங்காலம் வழக்கிலிருந்தது. ஆடல், பாடல், பாடலோடாடல், கூத்து. கூத்தாடல், கதைத்தழுவி வருங்கூத்து, (நாடகம்) கதைத்தழுவி வருங்கூத்தில் பாடிக்கொண்டே ஆடிக்கொண்டு வருதல், வந்து கதைவழி (உரிய வேடத்தால்) நடித்தல். என்பன இவையாவும் பழைய முறையே. இன்றைய தெருக்கூத்து முறைகளில் மட்டுமே இவ்வழக்கு மிகவும் அரிதாகிக் காணப்பெறுகிறது. நகர நாடகங்களிலும் முற்காலத் திருந்து இக்காலம் அறவே விலக்கப்பட்டுவிட்டது. ஆடல் மட்டும், நடை பற்றி யறிந்துணரப்பெற்று நடம். நட்டம், நாட்டு இயம், நாட்டியம், என்றெல்லாம் அவ்வத் தொழிலாளர்களால் கூறப்பெற்று பயிலப்பெற்று அவற்றின் சதுரப்பாடுகளைத் தெளிவுறத் தொழில் புரியுமிடத்து சதுர, அல்லது சதிர் என்று கூறி பிற்காலத்தில் அக்கலை சதிர்க்கலை என்றெல்லாம் தனித் தனியே வல்லுநர்களால் தமிழகத்தில் சிறப்புறத் தொழிற்படுத்தப்பட்டன. வல்லுநர் ஒரு சிலர் இருந்தும் தஞ்சாவூர்ச் சதிராட்டம் எனும் பகுதி அறவே காணுதற்கரிதாகிவிட்டது. இவற்றின் அடிமனை பண்டைய தமிழ்க் கூத்தமைதியேயாம். அவற்றில் வல்ல ஒரு ஆசிரியனை பொதுப்படப் பெயர் கூருது தகுதி

மட்டும் கூறி அறிமுகப்படுத்துகிருர் இளங்கோவடிகள் தான் இயற்றியருளிய சிலப்பதிகாரச் செல்வத்தில், அவரது தமிழ்ச் சொற்களை இங்கும் குறித்தறியலாம். பழந்தமிழ் நூல்களைக் கொண்டும், பிற்கால நூல் பலவற்றைக் கொண்டும் ஒல்லும் வகையானெல்லாம் தொகுத்துரைக்க முயற்சிப்பதே தமிழ்க் கூத்தமைதி எனும் இக்கட்டுரைகளின் குறிக்கோள்.

"இருவகைக் கூத்தின் இலக்கணமறிந்து
பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்
பதினே ராடலும் பாட்டுங் கொட்டும்
விதிமாண் கொள்கையின் விளங்க வறிந்தாங்
காடலும் பாடலும் பாணியுந் தூக்கும்
கூடிய நெறியின கொளுத்துங் காலைப்
பிண்டியும் பிணையலு மெழிற்கையுந் தொழிற்கையும்
கொண்ட வகையறிந்து கூத்துவரு காலைக்
கூடை செய்தகை வாரத்துக் களைதலும்
வாரஞ் செய்தகை கூடையிற் களைதலும்
பிண்டி செய்தகை யாடலிற் களைதலும்
ஆடல் செய்தகை பிண்டியிற் களைதலும்
குரவையும் வரியும் விரவல செலுத்தி
ஆடற் கமைந்த ஆசான்"

இவ்வடிகளின் உரைப்பகுதி, அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும் என்பதறிந்ததே.

அரும்பதவுரை (பொழிப்புரை)

தேசியும் மார்க்கமும் என்று சொல்லப்படா நின்ற இரண்டு வகைப்பட்ட அகக்கூத்தினது இலக்கணங்களை அறிந்து பல வகைப்பட்ட புற நடங்களையும் விலக் குறுப்புக்களைச் சேரப் புணர்க்கவும் வல்லனுகி அல்லியம் முதலாகக் கொடுகொட்டி ஈருகக் கிடந்த பதினெரு கூத்துக்களும் அக்கூத்துக்களுக்குரிய பாட்டுக் களும் அவற்றுக்கு அடைத்த

அடியார்க்கு நல்லாருரை (பொழிப்புரை)

இருவகைத்தாகிய அகக்கூத் தின் இலக்கணங்களை யறிந்து பலவகைப்பட்ட புறநடங்களையும் விலக் குறுப்புக்களைச் சேரப் புணர்க்கவும் வல்லனுகி அல்லிய முதற் கொடு கொட்டி யீருகக் கிடந்த பதினெரு கூத்துக்களும் அக்கூத்துக்களுக்குரிய பாட்டுக் களும் அவற்றுக்கு அடைத்த வாச்சியங்களின் கூறுகளும் நூல் களில் விதித்த வழியே தெரிந்து

வாச்சியக் கூறும் நூல்களின் வழியே தெரியவறிந்து அக் கூத்தும் பாட்டும் தாளங்களும் தாளங்களின் வழியே வந்த தூக்குக்களும் தம்மிற்கூடி நிகழுமிடத்துப் பிண்டி பிணையல் எழிற்கை தொழிற்கை யென்னும் அந்த நான்கினையும் நூல்களினகத்துக் கொண்ட கூறுபாட்டையறிந்து அகக்கூத்தின் இடத்துக் கூடைக்கதியாகச் செய்தகை வாரக்கதியிற் புகுதாமலும் வாரக் கதியாகச் செய்தகை கூடைக் கதியிற் புகுதாமலும் புறக்கூத்தில் ஆடல் நிகழுமிடத்து அவிநயம் நிகழாமலும் அவிநயம் நிகழுமிடத்து ஆடல் நிகழாமலும் குரவைக்கூத்தும் வரிக் கூத்தும் தம்மில் விரவாதபடியும் செலுத்தவல்ல ஆடலாசிரியனும் என்றவாறு :

கூத்தும் பாட்டும் தாளங்களும் தாளங்களின் வழி வந்த தூக்குக்களும் தம்மிற் கூடின நெறியையுடைய அகக்கூத்தும் புறக்கூத்து முதலாயின நிகழ்த்துமிடத்து பிண்டி பிணையல் எழிற்கை தொழிற்கையென்று சொல்லப்பட்ட நான்கினையும் நூலினகத்துக் கொண்ட கூறுபாட்டை யறிந்து அகக்கூத்து நிகழுமிடத்துக் கூடைக்கதியாகச் செய்தகை வாரக்கதியுட் புகாமலும் வாரக்கதியாகச் செய்தகை கூடைக்கதியுட் புகாமலும் புறக் கூத்தினிடத்து ஆடல் நிகழுமிடத்து அவிநயம் நிகழாமலும் அவிநயம் நிகழுமிடத்து ஆடனிகழாமலும் குரவைக் கூத்தும் வரிக்கூத்தும் தம்மில் விரவாதபடியும் செலுத்தி அமைந்த ஆடலாசிரியனும் என்க...

இவ்விரண்டு உரைப்பகுதிகளும் இது பொழிப்புரை, எனக்கூறி ஒவ்வொன்றாக விளக்கம் தந்து செல்கிறது. அடியார்க்கு நல்லாருரை விரிவாகவுள்ளது. ஆயினும் அரும்பதவுரைக்கு சற்று மாற்றமும் இருக்க, ஒரு சில பகுதி அரும்பதவுரையான் மட்டும் விளங்குவனவாகவே இருப்பதால் அரும்பதவுரையையும் அடியார்க்கு நல்லாருரையையும், எதிரெதிராக அச்சிட்டு ஆராயவேண்டும் என்பதும் எமது கருத்தாம்.

கோத்தர்மொழியில் மூவிடப்பெயர்கள் :

திரு. கோ. சுப்பையா,
மொழி இயல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தமிழகத்திலுள்ள நீலகிரி மலைத்தொடரில் கோத்தர்கள் எனும் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் பேசும் மொழிக்கு 'கோத்தம்' என்று பெயர். [1] தென் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த இம்மொழியில் காணும் 'இடப் பெயர்களி (Personal Pronouns)ன் அமைப்பு முறையினைப்பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழினைப்போன்று இம்மொழியிலும் மூவகை இடப்பெயர் கள் காணப்படுகின்றன. அவை முறையே தன்மை இடப் பெயர்; முன்னிலை இடப் பெயர்; படர்க்கை இடப்பெயர் என் பன. இடப்பெயர்களின் பொதுவான இலக்கண அமைப்பாவது:

இடப்பெயர் பகுதி + { ஒருமை விகுதி / பன்மை விகுதி }

இடப்பெயர்களின் பகுதியை இருவகைகளாகப் பிரிக்கலாம். அதில் ஒன்று ஒற்றுமை உருபுகளுக்கு முன்னர் வருவது — அதாவது வேற்றுமை உருபுகளோடு சேர்ந்து வருவது — உரு பேற்கும் சொல்லடி (Oblique form) யெனப் பெயராகும். மற் றொன்று தனித்து இயங்குவது — உருபேற்காமல் வருவது — இயல்பான சொல்லடி (Absolute form) யெனப் பெயர்பெறும்.

இடப்பெயர் பகுதி →	உருபேற்கும் சொல்லடி	/வேற்றுமை உருபுக்கு முன்னர்.
	இயல்பான சொல்லடி	/ஏனைய இடங்கள் (உரு பேற்காமல் வருவது)

தன்மை இடப்பெயர் :—

இவ்விடப் பெயரின் இயல்பான சொல்லடி ஆ-வாகும். இவ் ஆவுடன் ஒருமை விகுதி னகரம் அல்லது மகரப் பன்மை விகுதி சேர்ந்து இடப்பெயரைத் தருகின்றது.

ஆ + { ன் / ம் } → { ஆன் / ஆம் }

ஆன் — 'தன்மை ஒருமை இயல்பான சொல்லடி பெயர்.'

ஆம் — 'தன்மை பன்மை இயல்பான சொல்லடி பெயர்.'

இவ்விடப்பெயருக்கு உருபேற்கும் சொல்லடிகளாக அ-வும்; எ-வும்; காணப்படுகின்றன. அ-பன்மை விகுதியுடனும்; எ-ஒருமை விகுதியுடனும், பன்மை விகுதியுடனும் சேர்ந்து வருகின்றன. அவைகளாவன.

எ-ன் 'தன்மை ஒருமை உருபேற்கும் சொல்லடி'

எ-ம் 'தன்மை பன்மை உருபேற்கும் சொல்லடி. உளப்படாப் பன்மை'

அ-ம் 'தன்மை பன்மை உருபேற்கும் சொல்லடி. உளப்படுப் பன்மை'

இம்மொழி, தமிழைப்போன்று இல்லாமல், இயல்பான சொல்லடிப் பெயரில் உளப்படுப் பன்மை (Inclusive Plural), உளப்படாப் பன்மை (Exclusive Plural), என்ற வேறுபாட்டை உணர்த்துவதில்லை. இவ்விரு பன்மைப் பெயர்களுக்குப் பொதுவாக 'ஆம்' என்பதனையே வழங்குகிறது. ஆனல் இதற்கு எதிர்மாருக உருபேற்கும் சொல்லடிகளில் இவ் வேறுபாடு தெளிவாக உணர்த்தப்படுகிறது இதனல் இம்மொழியின் தொன்மை வடிவில் இவ்வேறுபாடு வழக்கில்—இயல்பான சொல்லடிப் பெயர்களில்—இருந்து அழிந்திருக்கக்கூடும். இதனைப் பற்றிய விளக்கம் முடிவில் கொடுக்கப்பட்டுள்ளது.

உருபேற்கும் சொல்லடிகள் வேற்றுமை உருபுகளுக்கு முன் வருவதற்குச் சான்றுகள்:—

என் — க் 'தன்மை ஒருமை — நான்காம் வேற்றுமை.'

என் — த் 'தன்மை ஒருமை — ஆரும் வேற்றுமை.'

எம் — க் 'தன்மை உளப்படாப் பன்மை — நான்காம் வேற்றுமை.'

எம் — த் 'தன்மை உளப்படாப் பன்மை — ஆரும் வேற்றுமை.'

அம் — க் 'தன்மை உளப்படுப் பன்மை — நான்காம் வேற்றுமை.'

அம் — த் 'தன்மை உளப்படுப் பன்மை — ஆரும் வேற்றுமை.'

முன்னிலை இடப்பெயர் :—

இயல்பான சொல்லடியாக நீ—காணப்படுகிறது. முன்னிலை ஒருமைக்கு [2] வும், னகரமும் விகுதிகளாக உள்ளன. மகரம் பன்மை விகுதியாகவுள்ளது. உருபேற்கும் சொல்லடியாக நி- உள்ளது. நீ - ஒருமை விகுதிக்கு முன்னரும், பன்மை விகுதி மகரத்திற்கு முன்னரும் வருகிறது. நி — ஒருமை விகுதி னகரத்திற்கு முன்னரும், பன்மை விகுதி மகரத்திற்கு முன்னரும் வருகிறது.

நீ — 'முன்னிலை ஒருமை இயல்பான சொல்லடி.'
நீ — ம் 'முன்னிலை பன்மை இயல்பான சொல்லடி.'
நி — ன் 'முன்னிலை ஒருமை உருபேற்கும் சொல்லடி.'
நி — ம் 'முன்னிலை பன்மை உருபேற்கும் சொல்லடி.'

எ - கா :—

நின் — க் 'முன்னிலை ஒருமை — நான்காம் வேற்றுமை.'
நின் — ஓட் 'முன்னிலை ஒருமை — மூன்றும் வேற்றுமை.'
நிம் — க் 'முன்னிலை பன்மை — நான்காம் வேற்றுமை.'
நிம் — ஓட் 'முன்னிலை பன்மை — மூன்றும் வேற்றுமை.'

சில சமயங்களில் முன்னிலை ஒருமை உருபேற்கும் சொல்லடியாகிய 'நின்' க்கு மாற்ருக 'தி' என்னும் சொல்லடி வழக்கில் காணப்படுகிறது. ஆனுல் இத் 'தி' எனும் சொல்லடி வல்லொற்றுக்களை சொல் முதலெழுத்தாகக் கொண்டு வரும் சொற்களுக்கு முன்னர்தான் வரும். இதனைப்பற்றிய விளக்கம் கடைசியில் தரப்படும்.

எ - கா :— திகராவ் 'உன் தம்பி.'
திபெட் 'உன் மனைவி'

படர்க்கை இடப்பெயர் :—

தா - இயல்பான சொல்லடியாகவும், த - உருபேற்கும் சொல்லடியாகவும் உள்ளன. இவ்விரு சொல்லடிகளும் னகர ஒருமை விகுதியுடனும், மகரப் பன்மை விகுதியுடனும், சேர்ந்து பெயரைத் தருகின்றன.

2, இக்குறியீடு வெறுமையைக் குறிப்பதாகும். வெறுமை நிலையை ஓர் இலக்கணக் கூருகக் கொள்வது மொழி இயல் மரபாகும்.

தா + { ன் / ம் } ⟶ { தான் / தாம் }

தான் — 'படர்க்கை ஒருமை இயல்பான சொல்லடி.'
தாம் — 'படர்க்கைப் பன்மை இயல்பான சொல்லடி.'

தா + { ன் / ம் } ⟶ { தன் / தம் }

தன் — 'படர்க்கை ஒருமை உருபேற்கும் சொல்லடி.'
தம் — 'படர்க்கைப் பன்மை உருபேற்கும் சொல்லடி.'

எ - கா :—

தன் — க் 'படர்க்கை ஒருமை - நான்காம் வேற்றுமை.'
தன் — த் 'படர்க்கை ஒருமை - ஆறும் வேற்றுமை'
தம் — க் 'படர்க்கைப் பன்மை - நான்காம் வேற்றுமை.'
தம் — த் 'படர்க்கைப் பன்மை - ஆறும் வேற்றுமை.'

படர்க்கை ஒருமை உருபேற்கும் சொல்லடி பெயர், முன்னிலை ஒருமை உருபேற்கும் சொல்லடி பெயரைப் போன்று, த - எனும் மாற்றை, கராள் - தம்பி'; கடாச் -' தங்கை'; பெட் - மனைவி' என்ற பெயர்களின் முன்னர் கொண்டுள்ளது. அதாவது 'தன்' என்பதிலுள்ள னகரம்கெட்டு, தகரம் தனித்து நின்று விடுகிறது

தன் ⟶ த / — { கரான் / கடாச் / பெட் }

எ - கா :—

தன் + கராள் ⟶ தகராள் 'தன்னுடைய தம்பி.'
தன் + பெட் ⟶ தபெட் 'தன்னுடைய மனைவி.'

விளக்கங்கள் :-

மூவிடப் பெயர்களிலும் உருபேற்கும் சொல்லடிகள் இயல்பான சொல்லடிகளினின்று தான் பிறக்கின்றன. அதாவது இங்கு இயல்பான சொல்லடிப் பகுதியிலுள்ள உயிர் குறுக்கலினால், உருபேற்கும் சொல்லடிகள் பிறக்கின்றன.

{ ஆம் / நீம் / தான் / தாம் } ⟶ உயிர் குறுக்கல் { ஆம் / நிம் / தன் / தம் } /வேற்றுமை உருபுகள்

இத்தன்மை திராவிட மொழிகள் அனைத்திலும் பொதுவாகக் காணப்படுகின்ற ஒன்றாகும்.

படர்க்கை ஒருமை உருபேற்கும் சொல்லடி பெயரில் த-, தன்-ற்கு மாற்றாகக் காணுவதை பின்வருமாறு விளக்கம் கூறலாம். அதாவது 'தன்' எனும் சொல் வல்லொற்றுக்களை சொல் முதலெழுத்தாகக் கொண்டப் பெயர்களின் முன்வரும் போது, அச்சொற்களிலுள்ள வல்லொற்றுக்களை ஒலிப்புடைய தாக்கி ஒலிப்பில்லாதவைகளை, னகரம் கெட்டு, தகரம் மட்டும் தனித்து நிற்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை ஆங்கிலக்குறி யீடு (writings) மூலம் விளக்கலாம்.

tan+Karal ——> * tangaral ——> tagaral
tan+ped ——> * tanbed ——> tabed

னகரம் கெடுவது இரு ஒற்றுக்கள் எளிமையாதலினால் (Simplification of Homorganic clusters) தான். இங்கு னகரம் கெடு வது இயல்பாயிற்று இதே போன்று முன்னிலை ஒருமை உரு பேற்கும் சொல்லடி பெயரிலும் 'நின்' என்பது னகரம்கெட்டு, நி-என மாறி, பின்னர் இந் 'நி' ஒப்புமையாக்கத்தினால் 'தி' என ஆக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இக்கூற்று வலி யுடையதா? என்பது ஐயப்பாடாக உள்ளது. அதாவது :

nin+ped ——> * ninbed ——> * nibed ——> dibed
(on the basis of Analogy).

nin+Karac ——> * ningarac ——> * nigarac ——> digarac (on the basis of Analogy).

இவ் ஒப்புமையாக்கம் படர்க்கை ஒருமை உருபேற்கும் சொல்லடி பெயரினைக்கொண்டு ஏற்பட்டிருந்திருக்கக் கூடும். இக்கூற்றிற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை.

தன்மை இடப் பெயரில் பன்மை உருபேற்கும் சொல்லடி பெயர்களில் தான் உளப்படுப்பன்மை; உளப்படாப் பன்மை என்ற வேறுபாடு உணர்த்தப்படுகின்றன. ஆனால் இயல்பான சொல்லடிப் பெயரில் இப்பாகுபாடு கிடையாது. இரண்டிற்கும் பொதுவாக 'ஆம்' எனும் சொல்லே வழக்கில் உள்ளது. இந்த 'ஆம்' எனும் சொல் இரு வேறு சொற்களின் ஒரு உருவ அமைப்புச் சொல்லாகும். (Homophonons form). அதாவது தொல்கோத்தர்மொழியில் 'ஆம்' என்பதற்கு இரு சொற்கள் காணப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் உருபேற்கும் சொல் லடி பெயர்களில் வேற்றுமை காணப்படுவது தகுந்த சான்றாகும். அதாவது 'எம்' என்பதற்கும், 'அம்' என்பதற்கும் தனித் தனியாக இயல்பான சொல்லடி பெயர்கள் இருந்திருக்க வேண்

டும். அவை முறையே '★ ஆம் (< ★ யாம்) எனவும், '★ஆம்' (< நாம்) எனவும் இருந்திருக்கலாம். இவ்விரு சொற்களும் தங்களிடேயே காணுகின்ற ஒலியன் ஒற்றுமை (Phonemic similiarity) யினுல் ஒன்று கூடி, ஒன்ருகி வழக்கிற்கு கொணரப் பட்டிருத்தல் வேண்டும். ஆனுல் இம் மாற்றம் (change) இயல் பான சொல்லடி பெயர்களில் ஏற்பட்டு, அத்துடனே நின்றி ருந்ததால்தான், உருபேற்கும் சொல்லடியில் வேறுபாடு உணர்த்தும் சொற்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

தொல் திராவிடம்: ——> தொல் கோத்தம் ——> கோத்தம்.

★ யாம் ——)	★ ஆம் (உளப்படா)	ஆம்.
★ நாம் ——)	★ ஆம் (உளப்படு)	

மூவிடப் பெயர்கள் பால் இனத் தன்மை (gendes distinction) யை விளக்காமல் எண் தன்மை (Number) யை விளக்குவது நோக்கத்தக்கது. தொல்கோத்தர் மொழியில் யகரமும் நகரமும் இழந்திருப்பதையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உதவிய நூற்கள் :-

டி. பர்ரோவ் & எம். பி. எம்னேவ் :- திராவிட மொழி சொற் பிறப்பியல் அகராதி" - ஆக்ஸ்போர்டு, இலண்டன். '60 & 68.'

கோ. சுப்பையா :- "field notes on Kota."

——————— :- "கோத்தர்கள்" - ஓர் அறிமுகம், செந்தமிழ், செப்' 69, மதுரை.

பி. கிருட்டிணமூர்த்தி :- "Personal Pronouns" Indiandinguistics. '68.

1. திராவிட மொழிக் குடும்பத்தை முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். அவை முறையே வட திராவிட மொழிக் குடும்பம்; நடு திராவிட மொழிக் குடும்பம்; தென் திராவிட மொழிக் குடும்பம் என்பன. தமிழ், மலையாளம், கன்னடம், துளு கோத்தம், தொதுவம், குடகு, படகா, முதலியன தென் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழி களாகும்.

கல்விக் கோவிலும் கடவுட் கோவிலும்

திரு. K. S. மகாதேவன், B. SC., M. A.,
சென்னை.

கல்விக் கோவிலைக் கடவுட் கோவிலாகக் கண்ட பாரதியார் "பள்ளித் தலமனைத்தும் கோவில் செய்வோம்!" எனப் பாடிச் சென்றார். ஆனால் இன்று ஆங்கிலத்தாள்களிலே வரும் கடிதங்களைக் காணும்பொழுது அந்த அளவிற்கு நாடு இன்னும் பண்பாடு அடையவில்லை என்பது தெரிகின்றது! பெற்றோருக்கும் மாணவருக்கும் பரிந்து பேசுவதாக எண்ணும் சிலர் ஏனோ கல்விக் கூடத்தை ஒரு கண் கொண்டு பார்க்கின்றனர்: கடவுட் கூடத்தை முற்றிலும் வேறு கண்கொண்டு காண்கின்றனர்!

பிள்ளைக்கு ஒரு மொழி, பிள்ளையாருக்கு ஒரு மொழியா?

அறிவு ஆங்கிலத்தால்தான் வளரும் என்று சிலர் பேசுகிறார்கள். அறிவு கல்விக் கோவிலில் மட்டும்தானா வளர்கிறது? கடவுட் கோவிலில் வளரவில்லையா? கல்விக் கோவிலில் பாடங்கள் ஆங்கிலத்தில்தான் இருக்கவேண்டுமென்றால் கடவுட் கோவிலிலும் அர்ச்சனையும் நாமவாளியும் ஆங்கிலத்திலேயே இருக்கலாமே! மந்திரத்தை முணு முணுத்தபடி முன்னே செல்லும் இவர்களைப் பார்த்து "உங்கள் பிள்ளைக்கு ஆங்கிலம் வேண்டுமென்று கூச்சல் போடுகிறீர்கள் இங்கு மட்டும் வந்து ஏன் உங்கள் பரம்பரை மொழியில் பாடம் ஒப்பிக்கின்றீர்கள்?" என்று கோவில்களில் கடவுளை வணங்கும் வழிமுறைகளை வகுத்தவர்கள் கேட்பதில் தவறு என்ன இருக்க முடியும். செந்தமிழ்ச் செல்வர் சிவபெருமானது உள்ளத்தை எல்லோரும் கண்டு இன்புறும்படி.

"அர்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக என்றான் தூமறைபாடும் வாயான்" —

என்ற சொற்களால் திறந்து காட்டும் சேக்கிழார் பெருமானை நாம் போற்றவில்லை என்றால் உலகத்தில் நம்மை யார் போற்றப் போகின்றனர்! நாம் ஆங்கிலத்தில் பயின்று இராக்கெட் வேகத்தில் முன்னேற விரும்பும் நேரத்தில் தூய அறிவே வடிவாக விளங்கும் கடவுளின் அருளை அடைய முயலும் சமயத் துறையிலும் இப்பொழுது இருக்கும் தேக்க நிலை நீங்கி 'புல்டோசர்' வேகத்திலாவது முன்னேற வேண்டுமென்று நாம் விரும்புவது

இயற்கைதானே! ஆங்கிலேயர்களைக் கொண்டு, அவர்கள் கிடைக்காவிட்டால் ஆங்கிலம் கற்ற தமிழர்களைக் கொண்டு நம் கடவுட் கோவில்களில் குழுமிழியுள்ள மெய்யன்பர்களுக்கு ஆங்கிலத் 'தேன் வந்து பாயுது காதினிலே' என்ற நிலையையும் உருவாக்கலாமே! அதுதானே நேர்மையும் ஆகும்!!

கல்விக் கோவிலில் நம்மவர்; கடவுட் கோவிலில் அன்னியர்!

அயல் மொழி பேசும் மேலை நாட்டினருக்கு இரட்டை வேடம் அணியத் தெரிவதில்லை. உள்ளத்தில் படுவதைத் தெளிவாக எடுத்து உரைக்கின்றனர். பல்வேறு நாட்டுப் பண்பினருடனும் கலந்து பழகிக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளக் கல்விக் கூடமும் கடவுட் கூடமும் ஒத்துழைக்க வேண்டும் என்று அறிஞர் பால் ஹாக்கிங்சு (Dr. Paul Hockings) என்பவர் கூற விரும்பினார். மாணவர்கள் தம் தாய் மொழியில் பயில்வதை விட ஆங்கிலத்தில் பயின்றால் அவர் தம் கல்வி உலகிற்கு நன்கு பயன் படும் என்றும், தம்மைப் போன்ற அயல்நாட்டு ஆராய்ச்சி யாளர்களைக் கோவில்களில் விட மறுப்பதால் உலகம் பெற வேண்டிய பயனைப் பெறமுடியாமல் இழக்கிறது, என்று எடுத்துக் கூறினார். இரட்டை வேடம் அணிவதில் வல்லவரான நமது வழி காட்டிகள் இரு வேறுபட்ட குரல்களை எழுப்பினார்கள்!

'பலே, பலே! பால் ஹாக்கிங்சு பேசுவதே பேச்சு. கல்விக் கூடத்தில் ஆங்கிலம் பயிற்சி மொழி என்று சொல்லி விட்டார்! கல்வியாளர்களே காணுங்கள்; கடைப் பிடியுங்கள். இன்றேல்...'' என்று ஒலித்தது ஒரு குரல் மற்றொரு குரலோ,

ஆ! ஆ!! பால் ஹாக்கிங்சு கடவுட் கூடத்தில் அடி வைப்பதா? போச்சு, காலம் கெட்டுப் போச்சு! இவர் சமயம் வேறு; இவர் வண்ணம் வேறு இவருக்கு ஒரே பிறப்பு; எம் பிறப்போ எண்ணத் தொலையாது! பழங்குடி மக்களோடு நெருங்கிப் பழகும் இவர் கடவுளுக்கு உகந்தவர் ஆகார்! பழங்குடி மக்களைக் 'கோபுர தரிசனம்' காணும் அளவிற்கு ஊருக்கு வெளியே வைத்திருக்கும் நாம் தாம் கடவுளுக்கு உகந்தவராவோம்! என்று ஒலித்தது! கல்விக் கூடத்தில் பால் ஹாக்கிங்சு நம்மவரானார்; ஆனால் கடவுட் கூட்டத்தில் அவரே அன்னியராகி விட்டார்! பெற்றோர்க்கும் மாணவர்க்கும் வழி காட்டவரும் ஆட்கள் ஏன் இப்படி இரட்டை வேடம் அணிய வேண்டும்? இது உள நூலார் ஆராய வேண்டிய ஒன்றாகும்!

பழம் பஞ்சாங்கம் கிழிகின்றதே!

நம் நாடு விடுதலை பெற்றுவிட்டது உண்மையே! இருந்தாலும் சிலருக்குச் சில செய்திகள் பிடிக்கவில்லை. இறந்த கணவனோடு எரிக்கப்படாமல் பெண் விடுதலை பெற்றது, குழந்தை மணத்தின் கொடுமைகளிலிருந்து குழந்தைகள் விடுதலை பெற்றது. தீண்டாமையிலிருந்து பழங்குடி மக்கள் விடுதலை பெற்றது ஆகியவை நம் சாத்திரத்திற்கு மாறுபட்டவை என்று பேசும் பொருட்செல்வப் பூரியார்கள் இன்றும் உள்ளனர்! இருந்தாலும் நால்வருண வேறுபாட்டைத் தருமம் என்று இவர்கள் பேசுவதையும், "நான்கு வருணத்தை நானே படைத்தேன்" என்று கடவுளை விட்டே கூவச் செய்வதையும் யாரும் இன்று ஏற்கும் நிலையில் இல்லை!

"பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா
செய்தொழில் வேற்றுமையால்"

என்ற பொய்யாமொழி தமிழர் ஆட்சியின் குறிக்கோளாகி விட்டது! கல்விக் கோவிலின் கதவுகளும், கடவுட் கோவிலின் கதவுகளும் எல்லாருக்கும் திறந்து கொண்டு இருக்கின்றன! பள்ளிப் பிள்ளைகள் சீருடை அணிந்து ஒருணவு உண்ணும் ஒப்பற்ற ஒரு நிலைமையை புரட்சியுள்ளம் கொண்ட கல்வி வல்லுநர்கள் எங்கும் ஏற்படுத்தி விட்டனர்! கல்விக்கோவிலில் இடமில்லாமல் ஓடிய வருண வேறுபாடு கடவுட் கோவிலிலாவது வாழவேண்டும் என்று ஏனோ சிலர் நினைக்கின்றனர்! வருண வேறுபாட்டினைக் காண்பதற்காக அங்கு வருகின்றவர்களின் சட்டைகளைக் கழற்றச் சொல்லுகின்றனர்! தகுதியும் திறமையும் உடையவர்களே கல்விக் கோவில்களில் நுழைய வேண்டும் என்று ஆலோசனை கூறுகின்றவர்கள் தகுதியும் திறமையும் உடைய எவரும் கடவுட் கோவிலில் வழிபாடு இயற்றப்போவது கேட்டு முகம் சுளிக்கின்றனர்! கல்விக் கோவிலிலும் கடவுட் கோவிலிலும் தாய்மொழி — மக்கள் மொழி — பாடமாக வந்து விட்டால் 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற இடம் நோக்கி இந்த வையம் நடந்து விடும் என்பது ஒரு தலை! இதைத் தடுத்து நிறுத்தும் ஒரே வழி கல்விக் கோவிலிலும் கடவுட் கோவிலிலும் வேற்றுமொழியைத் திணிப்பதே! அப்பொழுதுதான் தாய் மொழியில் கற்றுணர்ந்த அறிஞர்களைத் தகுதியில்லாதவர்கள் என்று ஒதுக்க முடியும்! பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் எளிய மக்கள் அறிவு பெற்றுப் பதவி கொள்வதைத் தடுக்க முடியும்!

இந்தப் பணியைத்தான் நீண்ட நாட்களாக ஆங்கில மொழியும், ஆரிய மொழியும் தமிழகத்தில் செய்து வந்திருக்கின்றன!

காந்தியடிகளின் கண்ணீர்!

நாட்டு மக்கள் கல்வி கற்று முன்னேறத் தடைகளாக இருக்கும் தீண்டாமையையும், ஆங்கிலப் பயிற்சி மொழியையும் காந்தியடிகள் வீரத்துடன் சாடினர். தீண்டாமை என்பது தெய்வத்துக்கும் மனிதனுக்கும் நாம் செய்யும் பாவம் (Untouchability is a sin against god and man) என்றார்.

அயல் மொழியான ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்டு பாடம் கற்பித்து வந்தது நாட்டிற்கும் சமூகத்திற்கும் அளவிடமுடியாத தீங்கினைச் செய்து விட்டது (The medium of a foreign language through which higher education has been imparted in India has caused incalculable intellecltual and moral injury to the nation) என்று தெளிவுப்படுத்தினர்! உடனடியாகப் பயிற்சி மொழி தாய்மொழியாக மாற்றப்பட வேண்டும் என்றும் கூறினர்.

பேடிக் கல்வி நாடும் பித்தர்கள்!

கவிஞர் பாரதியாரோ, ஆங்கிலம் வேண்டுவோரை இத் தாரணி உள்ளார் எவரும் அறியப் பித்தர் என்றே பாடிவிட்டார்! ஆம், இவர்கள் நாட்டின் அன்றைய நிலை, இன்றைய நிலை, நாளைய நிலை பற்றிக் கவலைகொள்ளாதவர்!

"முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டிருக்கும் இந்நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியும் தேர்கிலர்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்!"

இந்தப் பித்தர்களை இளைஞருலகம் பின் பற்றும் என்று சிலர் மனப்பால் குடிக்கின்றனர்! இன்று கடவுட் கோவிலில் ஆரிய

மொழி இருந்து கொண்டு தேவார, திருவாசக, திருவாய் மொழிகள் தோன்ருமல் செய்து கொண்டிருக்கிறது ! கல்விக் கோவிலில் ஆங்கிலம் இருந்து கொண்டு கலிலியோ. டார்வின், நியூட்டன்களைத் தமிழகத்தில் தோன்ருமல் செய்து கொண்டிருக்கிறது !

எல்லாம் தமிழ் என்ருல்......!

கல்விக் கோவில்களிலும் கடவுட் கோவிலிலும் தமிழ் என்ற நிலைவந்து விட்டால் விறகு வெட்டும் தமிழ் நாட்டு 'லிங்கன்' களும் கோவில் சுவரிலுள்ள கல்வெட்டுக்களைப்படித்து, வரலாற்று மேதையாகி, நாட்டின் தலைவனுகிவிடுவான். 'நீர்ப் பொருளை அழுத்திச் சுருக்க முடியாது (Liquid cannot be compressed) என்று பாஸ்கலே முதன் முதல் கூறினுர் என்ற பாட்டிக் கதையை பள்ளி மாணவி மறந்து

"ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ் கடல் நீர்
நாழி முகவாது நானுழி !"

என்று அவ்வைப் பாட்டி ஆழ் கடல் புகுந்து சோதனை செய்து கூறிய அரிய செய்தியை நினைத்துக் கொள்வாள் !

"கண்டது மன்னும் ஒருநாள் அலர் மன்னும்
திங்களைப் பாம்பு கொண்டற்று"

என்று பாடிய வள்ளுவப் பெருந்தகையின் வருணம் எது என்று வீண் கதை பேசுவதை விடுத்து 'ஞாயிற்றைப் பாம்பு கொண்டற்று' எனச் சொல்லாது 'திங்களைப் பாம்பு கொண்டற்று' என ஏன் சொன்னுர் என்ற ஆராய்ச்சியில் மாணவன் ஈடுபடுவான் ! 'உத்தியோகம் புருஷ லட்சணம்' என்ற அவலட்சண மொழி மக்கள் மனத்தில் மறைந்து 'தோன்றில் புகழொடு தோன்றுக' என்ற பொன்மொழி உறுதியாக இடம் பெறும் !

சென்ற இதழ்த் தொடர்ச்சி.

இருங்கோவேளும் நற்குடி வேளாளரும்

(இரு தமிழ்க் குலத்தோரின் தொன்மை தோற்றம் பற்றிய சில கருத்துக்கள்)

திரு. பி. இராமநாதன், பி. ஏ., பி. எல்.,

[இலண்டன் பல்கலைக் கழகத்தின் "ஆசிய, ஆப்பிரிக்கப் படிப்புக்கள் பள்ளியின் தாளிகை" தொகுதி 32 பகுதி - 2இல் (1969 சூன் திங்கள்) பக்கங்கள் 323 — 343-இல் வெளிவந்த ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்]

18-ஆவது புகழும் பெருமாளுக்கு ஆண்பிள்ளைகள் இல்லாமையால் தன் மனைவியின் உடன் பிறந்தாள் மகன் அருணாசலத்தைத் தத்து எடுத்தார். அவ்வாறுதத்து எடுத்த ஓரிரு ஆண்டுகளுக்குள் அவர் மகளே புகழும்பெருமாள் என்னும் ஓர் ஆண் மகவை ஈன்றாள். 18 ஆமவர் இறந்தபின் அருணாசலமும் புகழும் பெருமாளும் இருங்கோ பட்டத்திற்குச் சண்டையிட்டதாகவும் அவரவர் கட்சியினரால் இருவருமே (செவளைப்) பத்தொன்பதாம் இருங்கோவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகிறது ஆயினும் அருணாசலம் குடியானவர்களைக் கொடுமைப்படுத்தியதால் அவர்களால் ஊரைவிட்டே விரட்டுப்பட்டு விட்டார். 1695 முதல் 1715 வரை ஆண்ட புகழும்பெருமாள் முடிவைத்தானேந்தலுக்கு வடக்கிலுள்ள பேரூரணியை ஆண்ட கவண்டனிடம் சச்சரவிட்டுப் பின் அது குறித்து விசயரங்க சொக்கநாத நாயக்கனிடம் ஒரு செப்புப் பட்டயம் பெற்றதாகத் தெரிகிறது அவர் மகன்கள் அழகனும் கள்ளப்பிரானும் போர் வீரர்களாகிக் கேரளத்தில் கோழிக்கோட்டில் ஒரு போரில் மாண்டதாகக் கூறப்படுகிறது எனவே 19-ஆம் பட்டத்து (தத்து) அருணாசல இருங்கோவின் மகள் வள்ளியம்மையே 20-ஆம் பட்டத்துக்கு வந்தாள். அவள் மகன் பேரூரணிக் கெம்மக் கவுண்டனிடம் இருந்த தகராறை இறுதியாகத் தீர்த்து அக்கவுண்டனிடம் ஒரு செப்புப் பட்டயம் மூலம் ஒப்பந்தம் செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது [33] 21 ஆவது இருங்கோ அருணாசலத்தின்மேல்

---

33 இச் செப்புப் பட்டயமும் இருங்கோவேளின் சந்ததியாரிடமே இருக்கக்கூடும். அப்பட்டயம் பின்வருமாறு என ந வே. வ (அ) கூறும் ;—

சேர்ந்தையாப் புலவரால் பாடப்பட்ட பிள்ளைத் தமிழ் 31 பாடல்களைக் கொண்டது. இருங்கோவேளைப் பற்றியும் அவன் இனத்தாரைப் பற்றியும் ஆனசெய்திகளை அந்நூல் கூறுகிறது.

23. 22-ஆவது இருங்கோ புகழும்பெருமாள் மேல் மதுரகவி பாடியதாகக் கூறப்படும் விண்ணப்பமாலை ஒன்று உள்ளது. அது சுமார் 200 வரிகள் கொண்டது. 23-ஆவது போற்றியடி இருங்கோ முடிவைத்தானேந்தலிலேயே நிலையாகக் குடியேறி விட்டார். அவர் பின்னோர் அனைவரும் அங்கேயே வசிக்கலாயினர். முடிவைத்தானேந்தல் ஊர் நிலங்கள் முழுவதும் இருங்கோவேளிரின் சொந்தச் சொத்தாக இருந்ததை 24-ஆவது பட்டத்து அருணாசலத்தின் காலத்தில் குடியானவர்கள் வழக்குத் தொடர்ந்து தாங்கள் உழும் நிலங்களை ரயத்வாரியாக மாற்றிக் கொள்ளும்படியும், தனித்தனிப் பட்டாக்கள் வழங்கும்படியும் நீதிமன்ற ஆணை பெற்றனர். 26 - ஆவது பட்டத்து அருணாசலத்தின் (கி. பி. 1860 — 1920) சிற்றப்பன்மார் அது வரையும் பாகப்பிரிவினை செய்ய இயலாமல் இருந்த இருங்கோ வேளிருடைய தனிப்பட்ட சொத்துக்களையும் பாகப்பிரிவினை செய்ய வேண்டும் எனவழக்குத்[34] தொடர்ந்து வெற்றியும் பெற்றனர். அரசினரால் இருங்கோவேளிருக்குத் தரப்பட்ட மானியத்தை மட்டும் பாகப்பிரிவினை செய்ய இயலவில்லை.

"959-ஆம் வருசம் பங்குனி மாதம் 23-ஆம் தேதி முடிவைத். தானேந்தலிலிருக்கும் இருங்கோவேள் பிள்ளையவர்களுக்கு பேரூரணியிலிருக்கும் கோட்டைக் கெம்மக்கவுண்டனேன் மொழி மாருச்சீட்டு எழுதிகொடுத்தபடி. மொழி மாருச் சீட்டாவது தமக்கும் எனக்கும் எல்கை இசுக்கை நாலு வருடமாயிருந்ததில் தாங்களும் நானும் தெய்வ சம்மதிப்படிக்கு வீரப்பெருமாள் அய்யன் கோயிலுக்குத் தென்மேற்கு உப்புப்பாதைக்குக் வடக்கு, இருந்த கல்லை தெற்கு நான்சொன்ன இடத்தில் தாங்களும் சம்மதித்து கல்லுங் கத்தாழையும் போட்டு நாலு கிராமத்துப் பெரியவர்கள் முன்புக்கு இசுக்குத் தீர்த்துக் கொண்டதால் நான் சம்மதித்து தங்களுக்கு.........மொழிமாருச் சீட்டு எழுதிக் கொடுத்தேன்.........மேல எல்கை செட்டி மல்லன்பட்டி முக்கூடல் கல்வரைக்கும் இசுக்குத் தீர்ந்தது,"

34. திருநெல்வேலி பிரின்சிபல் சதர் அமின் கோர்ட்டில் 1861-ஆம் ஆண்டின் 1-ஆவது புது வழக்கு (Original Suit).

முதலில் அம்மானியம் 45 சங்கிலி நிலத்துக்கு ரூ. 206, அணு 3. பை 7 ஆக இருந்தது. பின்னர் அடுத்த நில அளவுக்குப் பின் 176·03 ஏக்கருக்கு ரூ. 201, அணு 5 ஆக இருந்தது.

24. இருங்கோவேள் என முடி சூட்டப்பட்ட பின் இச்சாதித் தலைவரைப் "பட்டத்துப்பிள்ளை" என்றே எப்பொழுதும் அழைப்பர். அவர் மனைவியை "அம்மையார்" என அழைப்பர். பழங்காலத்தில் பட்டத்துப்பிள்ளை ஆணையை மீறி நடந்தோரது குடுமியில் அழுகல் தேங்காயைக் கட்டித் தெருக்களின் வழியே ஓட ஓட விரட்டுவர் எனத் தர்சுடன் கூறுகிறார். அப்படி விரட்டும் பொழுது பின்னாலேயே ஒருவன் முதுகில் புளிய மிலாறினால் அடித்துக்கொண்டே செல்வானாம்.

25. இக்குலத்தினர் இருங்கோவேள் வழி வந்தவர்கள் எனவும் அவர்கள் முன்னாளில் இராமநாதபுரம்மாவட்டம் செழுவை யிலிருந்து குடியேறி வந்தவர்கள் எனவும் கூறுவதற்கு மேலுஞ் சில ஆதாரங்கள் பின் வருமாறு :—

1) "இருங்கோவேள்பிள்ளை" என்பதன் திரிபான "இருங்கோளபிள்ளை" என்னும் பெயரை இன்னும் நற்குடியார் ஊர்கள் ஒவ்வொன்றிலும் நூற்றுக்கணக்கான பேர்கள் கொண் டிருக்கிறார்கள். இன்றும் இக்குலத்தோரிடையே காணப்படும் வேறுபல பண்டைப் பெயர்களுள், ஆண்களிடையே சேரந்தையன் போன்றனவும் பெண்களிடையே ஆவியார்[35] தம்பிரான் குட்டி போன்றவையும் சில ஆகும்.

---

35. வேளிருள் ஒருவன் ஆவி. அவன் அகநானூற்றுப்பாடல் 1 வரி 3 இலும், பாடல் 61 வரி 15 இலும் குறிப்பிடப்படுகிறான். அவன் ஆண்ட பொதினி பிற்காலத்தில் ஆவினன்குடி எனப்பட்டு அதற்கும் பிற்காலத்தில் பழனி எனப் பெயர் மாற்றம் பெற்றது. நற்குடியாரிடையில் ஆவியார் என்னும் பெயர் வழங்குவதைக் கொண்டு ("புறநானூறு" தொகுதி 2 பக்கம் 195-இல்) துரைசாமிப் பிள்ளை. ஆவியின் சந்ததியினரே நற்குடிவேளாளர் என்று முடிவு கட்டுகிறார். இம் முடிவுக்கு ஏதுவாக "நன்குடிவேளாளர்" என்ற பெயரே ஆவினன்குடியோடு பழங்காலத்தில் இக்குலத் தோர் தொடர்பு கொண்டதால் ஏற்பட்டதோ என்று கருத இட முண்டு. இருங்கோவேள் ஆவி குடியைச் சேர்ந்தவன் எனச் சங்க இலக்கியத்தில் எங்கும் காணப்பட்டிலது. எனினும் வேளிர் தலைவர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் பெண் கொடுத் தலும் எடுத்தலும் செய்து நெருங்கிக் கலந்திருந்தனர். பாரி இறந்தபின் அவன் மகளிரை மணக்கும்படி கபிலர் முதலில் இளவிச்சிக்கோவையும் பின்னர் இருங்கோவேளையும் கேட்டது ஒரு சான்றாகும். பாண்டிய, சோழ, சேர மன்னரும் வேளிருடன்

2) முதுகுளத்தூர் தாலுகாவில் மேலச்செழுவனூருக்கு வடக்கு வடமேற்கே 2 மைல் தொலைவில் உள்ள பண்ணைக்குளம் என்னும் ஊரில் இன்னும் நற்குடிவேளாளர் சுமார் 30 குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்றனர்.

3) ஏந்தல் என்று முடியும் ஊர்ப் பெயர்கள் இராமநாதபுரத்தில் மிக அதிகம். முதுகுளத்தூர் வட்டத்தில் 82 ரெவினியூ ஊர்களும் அருப்புக்கோட்டை வட்டத்தில் 87 ரெவினியூ ஊர்களும் ''ஏந்தல்'' என முடிகின்றன. (ரெவினியூ ஊர்களில் அடங்கிய சிற்றூர்களில் ''ஏந்தல்'' என முடிபவை இவ்வெண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை). ஆனால் திருநெல்வேலி மாவட்டத்திலோ, சங்கர நயினர் கோயில் வட்டத்தில் உள்ள வன்னிக் கோனேந்தலும், இளையரசனேந்தலும், சீவைகுண்டம் வட்டத்தில்உள்ள முடிவைத்தானேந்தலும் மட்டுமே ஏந்தல் என முடிபவையாகும். இராமநாதபுரம் சீமையிலிருந்து வந்து குடியேறியவர்கள் வைத்தமையாலேயே முடிவைத்தானேந்தல் என்னும் பெயர் 'ஏந்தல்' என முடிவு பெற்றது எனலாம்.

4) இன்றும் திருநெல்வேலியில் நெல்லையப்பர் கோயில் ஆண்டுத் திருவிழா நாட்களில் ஒருநாள் அனவரதசுவாமி சிலையின் தலையின்மேல் முடிசூட்டும் உரிமை கோட்டை வேளாளர் குலத்தலைவர் ஒருவருக்கே இருந்து வருகிறது. பாண்டிய மன்னர்கள் காலத்தில் கோட்டை வேளாளரும் (நற்குடி வேளாளரும்) இன்னும் முக்கியமான அரசு அலுவல்களைச் செய்து வந்ததை இவ்வழக்கம் தெரிவிக்கிறது எனக்கருதலாம்

5) இக்குலத்தினர் முன்னர்க் குடியிருந்த இடங்களின் இடிபாடுகள் இன்னும் அத்தாளநல்லூரில் காணப்படுகின்றன. மேலச்செழுவனூரைச் சுற்றியும் முடிவைத்தானேந்தலைச் சுற்றியும் வாழ்ந்துவரும் பிற குலத்தவர்களும் இக்குலத்தோர் செழுவையிலிருந்து குடிபெயர்ந்து வந்த செய்தியைக் கூறுகின்றனர்.

26. கோட்டை வேளாளரின் கோட்டை சீவைகுண்டத்தின் வடகோடியில் பெருமாள் கோயிலுக்கு எதிரே அமைந்துள்ளது.[36] அது சுமார் 150 கச சதுரமானது. 10 அடி உயரமுள்ள மண்

மண உறவுகள் வைத்திருந்தனர். எனவே இருங்கோவேளுக்கு ஆவினன்குடியுடன் தொடர்பே இருந்திராது என மறுக்க இயலாது. ஆனால் இருங்கோவேளிர் ஆவியின் வழிவந்தவர்கள் எனத் திட்டமாகக் கூறுதற்குரிய சான்றுகள் எவையும் இல.

36. கோட்டை வேளாளரைப்பற்றிய செய்திகள் தர்சுடன், பேட் ஆகியோரின் மேற்குறித்துள்ள நூல்களிலிருந்து எடுக்கப் பட்டுள்ளன.

சுவர் மதில்கள் கொண்டது. சுவரின் ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு கதவு உண்டு. ஒரு கதவு எப்பொழுதும் பூட்டியே இருக்கும். ஒரு முறை ஒரு சுவாமி ஊர்வலத்தைக் காண அக்கதவின் வழியே சென்ற ஒரு சிறுமியை அவள் இக்குலத்தோர் பெண்களைக் கோட்டைக்கு வெளியே வரவிடாமல் வைத்திருக்கும் வழக்கத்தை மீறினுள் என்பதற்காக அவளைக் கோட்டையினர் கொன்று விட்டனராம் எனவேதான் அக்கதவு பூட்டியே இருக்கிறது என்பர். கொடுமைகள் பல நிறைந்த முசுலிம்கள், பாளையக்காரர்கள் ஆகியோர் ஆட்சிக்காலத்தில் தாங்கள் துன்புறுத்தப்படாமல் இருக்கக் கோட்டை வேளாளர் பெருந் தொகைகள் பணம் கொடுக்க வேண்டியிருந்தது என்பர். கோட்டை வேளாளர் பழககவழக்கங்களையும் உரிமைகளையும் பாதுகாப்பதாக அவ்வப்பொழுது நாட்டை ஆண்டுவந்த ஆட்சியாளர் தந்த உறுதி மொழிகளைக் கொண்ட பட்டயங்கள் இக்குல முதல்வரான கோட்டைப் பிள்ளையிடம் உள்ளனவாம்[37] இக் கோட்டை ஆபத்தான அளவுக்கு ஆற்றங்கரைக்கு மிக அருகில் உளளது ஆனல் 1923, 1924, 1931-ஆம் ஆண்டுகளில் தாமிர பரணிப் படுகையில் பெருஞ் சேதமுண்டுபண்ணிய வெள்ளங் களிலிருந்து இக்கோட்டை இயற்கையினலோ, அல்லது கோட்டை வாழுநர் செய்த முயற்சிகளாலோ தப்பித்துக் கொண்டது. அம் மூன்று வெள்ளங்களில் இரண்டில் ஆற்றின் மேல் (உள் நாட்டுப்) பகுதியிலேயே உடைப்புக்கள் ஏற்பட்டு சீவைகுண்டத்திற்குக் கிழக்கே கடல் வரையுள்ள நிலங்கள் யாவும் வெள்ளக்காடாகி விட்டன,

27. கோட்டை வேளாளர் "பைத்தியக்காரத்தனத்தின் எல்லையையும் தாண்டும் அளவுக்குப் பெண்களைத் தனிமைப் படுத்தி வைக்கின்றனர்"[38] அவர்கள் கோட்டையைவிட்டு வெளி வருதல் இயலாது. கோட்டைக்குள்ளும் தங்கள் நெருங்கிய உறவினரைத் தவிர வேறு ஆண்களைப் பார்க்க இயலாது. கோட்டைக்குள் நடமாடுவதும் கூடாது. ஒரு பெண் இறந்தால் அவள் உடலைப் பிறர் பார்த்திடா வண்ணம் கோணியில்

---

37. கே. என். கிருஷ்ணசுவாமி ஐயர் "திருநெல்வேலி மாவட்ட கெசட்டியரின் (1937) புள்ளி விவரப் பின் சேர்க்கையும், கெசட்டியர் இணைப்பம்" ; சென்னை ; அரசு அச்சகம், 1934 ; பக்கம் 303,

38. சே. சி. மாலோனி, "இந்திய மக்கள் தொகைக் கணக் கெடுப்பு" ; 12 ஆம் தொகுதி ; சென்னை : அரசு அச்சகம் ; 1912 பகுதி 1 : பக்கம் 163

வைத்துத் தைத்தே சுடுவதற்காக வெளிக்கொணர்கின்றனர். தொன்று தொட்டுக்கோட்டை வேளாளருக்கு ஊழியம் செய்து வருபவர்களான கொத்தமார் ஆண்களும் (கீழே காண்க), கோட்டைவேளாளர் வீட்டுப் புரோகிதர்களான பட்டணம் பிராமணர்களின் ஒரு விசித்திரமான பிரிவினரும் மட்டுமே கோட்டை வாயில்களுக்குள் நுழைய அனுமதிக்கப்படும் பிறசாதி ஆண்களாவர். ராபர் பிரவுனிங் எழுதிய "இரு சிலேகள்" என்னும் பாடலில் வரும் பெண்ணின் நிலைமையே கோட்டை வேளாளப் பெண்ணின் நிலைமையாகும்.[39] நற்குடிவேளாளர் குலப் பெண்களைத் தவிரப் பிறசாதிப் பெண்களனைவரும் கோட்டைக்குள்ளும், கோட்டையினுள் உள்ள வீடுகளுக்குள்ளும் செல்லலாம்.[40]

(தொடரும்)

---

39. சே. சி. மாலோனி, "தென்னிந்தியாவைப்பற்றிய நூல்" லண்டன் ; மெத்யூன். 1926, பக்கம் 252.

40. "இண்டியன் ஆன்டிகுவாரி" மூன்றும் தொகுதியில் (1874) பாயல் என்பார், தென்னிந்தியாவிற்குள் இசுலாமியர் புகுந்த பின்னரே அவர்களைப் பார்த்து அவர்களைப் போலவே பிறரும் பெணகளைத் தனிமைப்படுத்திவைக்கத் தொடங்கியிருக்க வேண்டும் ; எனவே கோட்டை வேளாளர் தாங்கள் அக் கோட்டையில் வாழ்ந்து வருவதாகக் கூறிக் கொள்ளும் ஆண்டு களில் பாதிக்குமேல் வாழ்ந்திருக்க முடியாது. (அதாவது 1874க்கு முன் சுமார் 475 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்துதான் அவர்கள் கோட்டையில் வாழ்ந்திருக்க வேண்டும்) என்று கூறுகிருர். எனினும் கோட்டை வேளாளர் சீவைகுண்டத்திற்கு வந்து குடியேறிச் சில காலம் கழித்தே பெண்களைத் தனிமைப்படுத்தி வைக்கும்பழக்கத்தை மேற்கொண்டு அப்பழக்கம் ஏற்பட்டபின் அதனைச் சரியென்று கூறுமுகத்தான் தாங்கள் முதுகுளத்தூர் வட்டம் செழுவையில் வாழ்ந்துவந்த காலத்திலேயே அப்பழக் கத்தைக் கடைப்பிடித்ததாகக் கதைக்கட்டிக் கொண்டனர் என்று கூறவும் இடமுண்டு. பழங்காலத்தில் யாரோ பாளையக்காரர் ஒருவரும் அவருடைய கையாட்களும் சுற்றுவட்டாரத்தில் கெட்ட பெயரெடுத்துவிட்டமையால் ஒரு கோட்டைக் கட்டி அதனுள் ளேயே ஒடுங்கி வாழ்ந்திருக்கலாம் ; கோட்டை வேளாளர் அப்படிப்பட்டவர்களுடைய சந்ததியார்களாக இருக்கலாம் என்று தன்னுடைய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையில் மாலோனி கூறுவர். ஆயினும் இது அவருடைய யூகமேதவிர வேறில்லை.